Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.59/2017 |
| Police station | : | நெல்லிக்குப்பம் பி. எஸ் |
| Deposition of witness for Prosecution | : | LW4 / PW3 |
| Name | : | சீனுவாசன் |
| Father Name/Husband Name | : | விஜயரங்கன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 08.12.2022 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது காராமணிக்குப்பம் சீத்தாராமன் நகரில் வசித்து வருகிறேன். அசா 1 ஐ தெரியும். கடந்த 10.03.2015ம் தேதி இரவு சுமர் 08.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது அசா1 செல்வக்குமார் வீட்டில் குய்யோமுய்யோ என்று சத்தம் கேட்டது நான் வெளியில் ஓடி வந்து பார்த்தேன். அப்போது இரண்டு நபர்கள் செல்வக்குமார் வீட்டிலிருந்து வெளியில் ஓடி வந்தனர். நான் அவர்களை பின்புறமாக பார்த்தேன். நாங்கள் துரத்திச்சென்று பார்த்தோம் அதற்குள் ஓடிவிட்டார்கள். அவர்களை பின்புறமாக பார்த்ததால் அவர்களை என்னால் அடையாளம் சொல்ல இயலாது. நான் அதன் பிறகு செல்வக்குமார் மனைவியிடம் கேட்டதற்கு அவருடைய 10 பவுன் தாலிச்செயினை அறுத்துக்கொண்டு சென்றதாக கூறினார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. 10.03.2015 அன்று போலிசார் என்னை எங்கள் வீட்டு தெருவில் வைத்து இரவு 08.30 மணிக்கு விசாரித்தனர். அதற்கு பிறகு என்னை விசாரிக்கவில்லை. போலிஸ் விசாரணையில் 10 பவுன் நகையை எதிரிகள் அறுத்து சென்றார்கள் என்று செல்வக்குமார் மனைவி என்னிடம் சொன்ன விஷயத்தை சொன்னேன். மேற்கண்ட சம்பவத்தை தாங்கள் பார்க்கவில்லை அசா 1 தங்களின் எதிர் வீடு என்பதால் அதற்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

-

# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 59/2017 |
| Police station | : | நெல்லிக்குப்பம் பி.எஸ் |
| Deposition of witness for Prosecution | : | LW 6 / PW4 |
| Name | : | கமலக்கண்ணன் |
| Father Name/Husband Name | : | கோபால்சாமி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 08.12.2022 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>:**

1. கடந்த 10.03.2015ம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் என் அண்ணன் செல்வக்குமார் வீட்டில் திருடு போனதாக கூறினார்கள். நான் இரவு சுமார் 11.00 மணியளவில் அங்கு விசாரிக்க சென்றேன். போலிசார் அங்கு விசாரித்துக்கொண்டிருந்தனர். இரவு சுமார் 12.00 மணியிலிருந்து 01.00 மணிவரை சம்பவயிடத்தில் போலிசார் விசாரணை செய்து அந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். நானும் கணேஷ்குமார் என்பவரும் அதற்கு சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலஉள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. எனக்கு 8.30 மணியிலிருந்து 09.00 மணிக்குள்ளாக என் அண்ணன் வீட்டின் பக்கத்தில் இருந்த கனகவேல் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார். நான் அது பற்றி என் அண்ணனிடம் 09.00 மணிக்கு போன் செய்து கேட்டேன். நான் 10.30 மணிக்கு என் அண்ணன் வீட்டிற்கு சென்றுவிட்டேன் அதிலிருந்து இரவு முழுவதும் அங்கு தான் இருந்தேன். நான் என் அண்ணன் வீட்டிற்கு செல்வதற்கு முன்பாகவே போலிசார் அங்க தான் இருந்தார்கள். எத்தனை மணிக்கு போலிசார் அங்க வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அது பற்றி நான் என் அண்ணனிடம் கேட்கவில்லை. எத்தனை மணிக்கு படம் வரைந்தார்கள் என்றால் அப்போது நான் கையில் நான் வாட்ச் எல்லாம் கட்டியிருக்கவில்லை. 01.00 மணிக்கு நான் கையெழுத்து போட்டேன். சம்பவயிடத்தில் போலிசார் எவ்வளவு நேரம் எழுதினார்கள் என்றால் நான் அண்ணன் அண்ணியை சமாதானம் படுத்திகொண்டிருந்ததால் அது பற்றி கவனக்கவில்லை. சுமார் 12.00 யிலிருந்து 12.30 மணிவரை படம் வரைந்தனர்.

2. போலிசார் படம் வரையும்போது அவர்கள் அருகில் இருந்தார்களா அல்லது தங்கள் அண்ணனிடம் பேசிக்கொண்டிருந்தார்களா என்றால் அண்ணனிடம் பேசிவிட்டு போலிசார் வரைபடம் வரையும்போது நான் வெளியே வந்து விட்டேன் போலிசார் அருகில் தான் இருந்தேன். எவ்வளவு நேரம் வரைந்தார்கள் என்றால் 1 மணிநேரமாக வரைந்தார்கள். வீட்டிற்கு வெளியே காம்போன்டி கேட்டிற்கு உள்ளே வாசற்படியில் வைத்து படம் வரைந்தார்கள். படம் வரைந்த முடித்து பிறகு போலிசார் விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை. மறுபடியும் சாட்சி படித்து பாாத்து தான் கையெழுத்து போட்டேன் போலிசார் என்னை விசாரித்து தான் கையெழுத்து போட்டேன். போலிசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மணி கணக்கு தெரியவில்லை. போலிசார் படம் வரைந்து கையெழுத்து வாங்கியபின்னர் தங்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா அல்லது விசாரித்து வாக்குமூலம் பெற்றபிறகு படம் வரைந்தார்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அசா 1 தங்களின் அண்ணன் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு விட்டு சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.